# தமிழ் நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை - 600 032.
தொலைபேசி : 044- 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை - 600 032.
முன்னிலை : முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ)

முறையீட்டு மனு எண். 018/ந/2017

ஆணை எண். 256/2017

நாள் : 13/11/2017

திரு கி. கோதண்டபாணி,
திண்டிவனம். – முறையீட்டு மனுதாரர்

நகராட்சி ஆணையர்,
திண்டிவனம் நகராட்சி. – எதிர் மனுதாரர்

விழுப்புரம் மாவட்டம், திண்டிவனம் நகராட்சி, மைலம் சாலை, எண்.70–பி, தாய் இல்லம் முகவரியில் வசிக்கும் திரு கி. கோதண்டபாணி அவர்களின் 23.01.2017 நாளிட்ட முறையீட்டு மனு, இம்முறைமன்ற நடுவத்தில் 25.01.2017 அன்று பெறப்பட்டு, 018/2017 எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டது. மேற்குறிப்பிட்ட முறையீட்டு மனு மீது கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது :-

## ஆணை

விழுப்புரம் மாவட்டம், திண்டிவனம் நகராட்சி, மைலம் சாலை, எண்.70–பி, தாய் இல்லம் முகவரியில் வசிக்கும் திரு கி. கோதண்டபாணி என்பவர், திண்டிவனம் நகராட்சியைச் சேர்ந்த திரு வித்யாசாகர், திருமதி விமலாபாய் மற்றும் பங்கஜ் ஆகியோர் மீதான குற்றச்சாட்டுகளைத் தெரிவித்து உரிய நடவடிக்கை எடுக்கக் கோரி இம்முறைமன்ற நடுவத்தில் முறையீடு செய்திருந்தார். முறையீட்டு மனுதாரரின் மனு இம்முறைமன்ற நடுவத்தில் பரிசீலனையில் இருந்த நிலையில், 16.11.2017 அன்று நடைபெறவிருந்த விசாரணைக்கு மனுதாரர் அழைக்கப்பட்டிருந்தார். இம்முறைமன்ற நடுவத்திற்கு அனுப்பிய குற்றச்சாட்டுகள் சம்பந்தமாக சென்னை உயர்நீதிமன்றத்திலும் வழக்கு தாக்கல் செய்யப்பட்டு நீதிப்பேராணை மனு எண்.22548/2017 மற்றும் நீதிப்பேராணை பல்வகை மனு எண்.23677/2017–ல் திரு வித்யாசாகர் அவர்களின் மீதான குற்றச்சாட்டுகள் சம்பந்தப்பட்ட செயலுக்கு தடையாணை பெற்றுள்ளதாக தனது 03.11.2017

நாளிட்ட கடிதத்தில் மனுதாரர் தெரிவித்துள்ளதுடன், குற்றச்சாட்டுகள் சம்பந்தமாக தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம் மேற்கொள்ளும் நடவடிக்கையினையும், விசாரணையினையும் நிறுத்திக்கொள்ளும்படியும் கோரியுள்ளார். முறையீட்டு மனுதாரரின் கோரிக்கையினை ஏற்று, 23.01.2017 நாளிட்ட முறையீட்டு மனு மீதான நடவடிக்கையினை இத்துடன் முடித்துக்கொள்ள இம்முறைமன்ற நடுவம் முடிவு செய்து அவ்வாறே ஆணையிடுகிறது.

**2017**– ஆம் ஆண்டு, நவம்பர் திங்கள், 13–ஆம் நாள் கையொப்பமிட்டு, அலுவலக முத்திரையிட்டு இவ்வாணையிடப்படுகிறது.

--//ஒப்பம்//--

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

15/11/17

செயலாளர்.

பெறுநர்

1. திரு கி. கோதண்டபாணி,
   நெ. 70–பி, தாய் இல்லம்,
   மைலம் ரோடு, திண்டிவனம்

2. நகராட்சி ஆணையர்,
   திண்டிவனம் நகராட்சி,
   திண்டிவனம்.

நகல் : முறைமன்ற நடுவரின் நேர்முக எழுத்தர்,
பிரிவு அலுவலர்(நிர்வாகம்)
பேரூராட்சி பிரிவு –3,
இ.கோ. / உதிரிகள்